மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 68/2021

பெயர் –ராஜாராம் (வா.சா.1)

நாள் – 06.02.2023

பிரதிவாதி தரப்பில் கு.வி.

நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.Sc. படித்துள்ளேன். தற்சமயம் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் தற்போது திருத்தங்கலில் குடியிருந்து வருகிறேன். நான் தாக்கல் செய்திருக்கும் பிராது மற்றும் நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது தந்தையின் இறப்பை எனக்கு சாதகமாக கருதி பிரதிவாதிகள் மீது இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பிராதில் எத்தனை சொத்துக்கள் பற்றி சொல்லியுள்ளேன் என்றால் இரண்டு சொத்துக்கள் பற்றி சொல்லியுள்ளேன. சொத்துவிவரம் பற்றி தெரியும் என்றால் சரிதான் தாவா சொத்துக்கள் எங்கு உள்ளது என்றால் கோள்வார்பட்டியில் உள்ளது. தாவா சொத்துக்கள் எனது தகப்பனாரின் சுய சம்பாத்தியம் என்றால் சரிதான். இறந்துபோன எனது தாய் தகப்பனாருக்கு நான் மட்டும் தான் ஒரே வாரிசு என்றால் சரிதான். இறந்துபோன எனது தகப்பனாருக்கு 2,3 பிரதிவாதிகள் சட்டபூர்வமான வாரிசுகள் என்றால் சரிதான். வாரிசு விவரம் பற்றி எனது நிருபண உறுதிக்கூற்றில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது தாயார் நான் மூன்று மாத குழந்தையாக இருந்தபோதே எனது தகப்பனாரிடம் இருந்து விவாகரத்து பெற்று பாலகிருஷ்ணன் என்பவரை திருமணம் செய்துகொண்டார் என்றால் சரியல்ல. பாலகிருஷ்ணன் என்பவரை விவாகரத்து செய்துவிட்டு எனது தாயார் செட்டுடையான்பட்டியை சேர்ந்த கிருஷ்ணசாமி என்பவரை திருமணம் செய்துகொண்டார் என்றால் சரியல்ல. எனது தாயாருக்கும் கிருஷ்ணசாமிக்கும் நடந்த திருமணத்தின் பயனாக சோலைராஜ் என்பவர் பிறந்தார் என்றால் சரியல்ல. சோலைராஜின் இறப்பிபின்னிட்டு எனது தாயார் கிருஷ்ணசாமியை விவாகரத்து செய்து விட்டு எனது தாயார் தனியாக வாழ்ந்துவந்தார் என்றால் சரியல்ல. இந்த விவரம் எனக்கு தெரியும் நான் வழக்கிற்காக இல்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாயார் தற்போது யாருடன் உள்ளார் என்றால் தனியாகத்தான் உள்ளார். இந்த வழக்கில் நான் எனது தாயாரை சாட்சியாக விசாரிக்கலாம் என்றால்

சரிதான். எனது தகப்பனார் பூல்ராஜ் 1974ல் 1ம் பிரதிவாதியை திருமணம் செய்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இறப்பதற்கு முன்பாக பிரதிவாதிகளுடன் சந்தோஷமாக வாழ்ந்தார் என்றால் சரியல்ல. எனது அம்மாவுடன் தான் வாழ்ந்தார். எனது தகப்பனார் இறந்தபோது 1ம் பிரதிவாதிதான் இறுதி சடங்கு செய்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இறப்பில் 2,3 பிரதிவாதிகள் கலந்து கொண்டார்கள் என்றால் சரிதான். எனது பிராதிலும், நிருபண உறுதிக்கூற்றிலும் எனது அனுமதி இல்லாமல் 2,3 பிரதிவாதிகள் எனது தகப்பனாரை தூக்கி சென்றதாக சொல்லியுள்ள நிலையில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேனா என்றால் அம்மாபட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். அந்த புகாரை பொறுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் விசாரித்தார்கள். விசாரித்து எழுத்து பூர்வமான ஆவணம் ஏதேனும் ஆவணத்தை நான் எழுதிக்கொடுத்தேனா என்றால் நான் எழுதிக்கொடுத்தேன். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். புகார் சம்பந்தமாக எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது தகப்பனாரை காவல் நிலையத்தில் விசாரித்தபோது அவர் ஊரில் இருப்பதுதான் பிடித்துள்ளதாகவும், நான் வேலைக்கு செல்வதால் தனியாக இருப்பது பிடிக்கவில்லை என்று சொன்னதால் உரிலேயே இருக்க சொல்லிவிட்டார்கள். நான் சொன்ன புகாரின் அடிப்படையில் காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் எனது தகப்பனார் 2,3 பிரதிவாதிகள் இருப்பது சந்தோஷமாக இருப்பதாக சொன்னதால் சுந்தரகுடும்பன்பட்டியில் வாழ்ந்தார் என்றால் ஊரில் இருப்பதற்காக போனார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.